**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 132/2015**
**C/W. OS. 169/2019**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.10.2025 | | |
| பெயர்: | ராமலிங்கம் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | தங்கராசு |
| கிராமம்: | மாங்கனாம்பட்டு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தனியார் | வயது : | 56/2025 |

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 29.10.2025**

**(ஆரம்பித்த நேரம்–12.12)**

1. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ராஜாவின் தகப்பனார் நடேசனும் எனது தகப்பனார் தங்கராசுவும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை நிதிமன்ற வழக்கறிஞர் ஆணையரும் நில அளவையரும் அளந்தார்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையரும் நில அளவையரும் இதற்கு முன்பு அளக்க வந்தபோது அளக்காமல் திரும்பிவிட்டனர் என்றால் சரிதான். அவர்கள் அவ்வாறு திரும்பியதற்கு காரணம் வழக்கு புல எண்கள் 'அ' பதிவேட்டில் இல்லை என்ற காரணம்தான் என்றால் சரியல்ல.

2. எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா என்பது நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட UDR பட்டா என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கில் முனியன் என்பவர் வீடு கட்டி குடியிருந்து அவர் இறந்தபிறகு தற்போது அவரது பேரன் சிவா குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த முனியன் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் நடேசனிடமிருந்து கிரயம் பெற்றார்

என்றால் சரிதான்.

3. தாவா சொத்து சர்வே எண் 262/H/47 மற்றும் 46 என்பது 262/13 லிருந்து பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. UDR பட்டா கொடுப்பதற்கு முன்பு சர்வே எண் 262/13ல் தாவா சொத்து இருந்தது என்றால் சரிதான். சர்வே எண் 262/13 சொத்து 01.04.1960ல் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான நடேசன் என்பவரால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதிகள் தகப்பனார் நடேசனின் அனுமதியின் பேரில் நான் தாவா சொத்தில் குடியிருந்து விட்டு அவருக்கு தெரியாமல் நான் பட்டாவை மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.23)**